பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

21 05 2025 **WEDNESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

1. சத்தீஸ்கரில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் 27 நக்சலைட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.
2. நக்சலைட்டுகளுக்கு எதிரான நடவடிக்கைளில் பாதுகாப்புப்படையினர் பணி பாராட்டுதலுக்குரியது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
3. இந்தியாவில் செயல்படுத்தப்பட்டுவரும் சுகாதாரத் திட்டங்கள் உலகளாவிய வரவேற்பை பெற்றுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
4. ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில் யுக்ரைன் பாதுகாப்புப்படையை சேர்ந்த ஆறு பேர் உயிரிழந்தனர்.
5. **Irish** ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Akanksha Salunkhe** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இனி விரிவான செய்திகள்--

<<<<<>>>>>

சத்தீஸ்கரில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் 27 நக்சலைட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

பிஜாப்பூர், நாராயண்பூர் மாவட்டங்களுக்கு உட்பட்ட வன எல்லைப்பகுதியில் நக்சலைட்டுகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலையடுத்து பாதுகாப்புப்படையினர் அப்பகுதியை சுற்றிவளைத்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

அப்போது இருதரப்புக்கும் இடையே துப்பாக்கிச்சண்டை நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இதில் 27 நக்சலைட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டதாக அம்மாநில துணை முதலமைச்சர் திரு விஜய் சர்மா கூறியுள்ளார்.

பாதுகாப்புப்படையினர் அப்பகுதியில் தேடுதல் வேட்டையை தொடர்ந்து மேற்கொண்டு வருவதாகவும் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதற்கிடையே, நக்சலைட் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், அமைதி மற்றும் வளர்ச்சியை உறுதி செய்வதற்காக பாதுகாப்புப்படை ஆற்றிவரும் பணி பாராட்டுதலுக்குரியது என்றார்.

நக்சலைட்டுகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் தற்போது பெரிய அளவில் வெற்றி கிடைத்திருப்பதையும் அவர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுதொடர்பாக, உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவை பகிர்ந்துள்ளார்.

திரு அமித் ஷா அந்த பதிவில், சத்தீஸ்கரில் 27 நக்சலைட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை விளக்கியுள்ளார்.

முக்கிய நக்சலைட் தலைவர்களும் இதில் அடங்குவார்கள் என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 30 ஆண்டுகளில் முதல் முறையாக நக்சலைட் தலைவர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டிருப்பது இதுவே முதல் முறை என்றும் அவர் கூறியுள்ளார்.

இதற்காக பாதுகாப்புப்படையினருக்கு தாம் பாராட்டு தெரிவித்துக்கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சத்தீஸ்கர், மகாராஷ்ட்ரா மற்றும் தெலங்கானாவில் நக்சலைட்டுகளை ஒழிப்பதற்காகக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் 54 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

84 நக்சலைட்டுகள் சரணடைந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நடப்பு நிதியாண்டு இறுதிக்குள் நக்சலைட் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் இருப்பதாகவும் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

**<<<<<>>>>**

சிங்கங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், சிங்கங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டத்திற்கு உரிய பலன் கிடைத்திருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

குஜராத் வனப்பகுதிகளில் சிங்கங்களை பாதுகாக்கவும், அவற்றிற்கு உரிய சுற்றுச்சூழலை ஏற்படுத்தவும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருப்பதாகவும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**<<<<<>>>>**

இந்தியாவில் செயல்படுத்தப்பட்டுவரும் சுகாதாரத் திட்டங்கள் உலகளாவிய வரவேற்பை பெற்றுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

ஜெனிவாவில் நடைபெற்ற உலக சுகாதார சபையின் கூட்டத்தில் மத்திய சுகாதாரத்துறை செயலர் திருமதி **Punya Salila Srivastava** இன்று உரையாற்றினார்.

உலகின் மிக்பெரிய காப்பீட்டுத்திட்டமாக ஆயுஷ்மான் பாரத் திட்டம் திகழ்கிறது என்று அவர் கூறினார்.

இதன் காரணமாக எழை மக்கள் பெரிய அளவில் பயனடைந்திருப்பதாகவும் திருமதி **Punya Salila Srivastava** தெரிவித்தார்.

**<<<<<>>>>**

ஆசிய உற்பத்தி அமைப்பின் தலைமை பொறுப்பினை இந்தியா ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்தோனேஷியாவில் நடைபெற்ற இந்த அமைப்பின் நிர்வாகக்குழு கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவின்படி இந்தியா இப்பொறுப்பினை ஏற்றுக்கொண்டது.

<<<<<>>>>

அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் நாடு முழுவதும் 103 ரயில் நிலையங்கள் நவீன மயமாக்கப்பட்டுள்ளன.

இந்த ரயில் நிலையங்களை பிரதமர் திரு நரேந்திர மோடி காணொலி வாயிலாக நாளை திறந்துவைக்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ராஜஸ்தான் மாநிலம் **Bikaner-**ல் நடைபெறும் நிகழ்ச்சியில் பிரதமர் இந்த ரயில் நிலையங்களை திறந்துவைக்க உள்ளதாக அவர் மேலும் கூறுகிறார்.

18 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு உட்பட்ட 86 மாவட்டங்களில் உள்ள ரயில் நிலையங்கள் இந்த திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்டுள்ளன.

அதிகபட்சமாக, உத்தரப்பிரதேசத்தில் 19 ரயில் நிலையங்கள் நவீன மயமாக்கப்பட்டுள்ளன.

குஜராத்தில் 18, மகாராஷ்ட்ராவில் 15, தமிழகத்தில் ஒன்பது, ராஜஸ்தானில் எட்டு, மத்தியப்பிரதேசதில் ஆறு, சத்தீஸ்கர் மற்றும் கர்நாடாகவில் தலா ஐந்து ரயில் நிலையங்கள் இந்த திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட ரயில் நிலையங்கள் அமைந்துள்ள பகுதிகளின் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் வகையில் இவை மேம்படுத்தப்பட்டுள்ளன.

காத்திருப்பு அறைகள் மற்றும் கழிப்பறைகள் நவீன மயமாக்கப்பட்டுள்ளன.

மாற்றுத்திறனாளிகள் எளிதாக பயன்படுத்துவதற்கான கூடுதல் வசதிகள் இந்த ரயில் நிலையங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இலவச **Wi-fi** வசதி மற்றும் அதிநவீன பயணிகள் தகவல் சேவை போன்றவை இந்த ரயில் நிலையங்களின் சிறப்பு அம்சமாகும்.

தமிழகத்தின் சென்னையில் உள்ள பரங்கிமலை ரயில் நிலையத்தில் ஆறு கோடி ரூபாய் செலவில் இந்த திட்டத்தின்கீழ் நவீனமயமாக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***Voice Byte – செங்கல்பட்டு சுரேகா – 44 Sec.***

<<<<<>>>>

**Khuzdar** சம்பவத்திற்கு இந்தியாதான் காரணம் என்று பாகிஸ்தான் கூறுவதை மத்திய அரசு திட்டவட்டமாக நிராகரித்துள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செயலர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், பாகிஸ்தானில் நடைபெறும் சம்பவங்களுக்கு இந்தியாவை காரணம் காட்டுவது அந்நாட்டு அரசின் வாடிக்கையாக உள்ளது என்று குறிப்பிட்டார்.

தீவிரவாதத்துக்கான மையமாக பாகிஸ்தான் திகழ்கிறது என்ற உலக நாடுகளின் கவனத்தை திசை திருப்புவதற்காக இதுபோன்ற குற்றச்சாட்டுகளை அந்நாடு தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.

இதனை உலக நாடுகள் ஏற்றுக்கொள்ளாது என்றும் அவர் தெரிவித்தார்.

**Khuzdar** சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்வதாகவும் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் கூறினார்.

**<<<<<>>>>**

ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில் யுக்ரைன் பாதுகாப்புப்படையை சேர்ந்த ஆறு பேர் உயிரிழந்தனர், 10 பேர் காயமடைந்தனர்.

**Sumy** எல்லைப்பகுதியில் ராணுவ வீரர்கள் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக யுக்ரைன் கூறியுள்ளது.

**<<<<<>>>>**

தென்மேற்கு பருவமழை கேரளாவில் அடுத்த மூன்று முதல் நான்கு நாட்களுக்குள் தொடங்க வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த வானிலை ஆய்வு மையத்தின் விஞ்ஞானி திரு நரேஷ் குமார், நடப்பாண்டில் முன்கூட்டியே பருவமழை தொடங்க உள்ளதாக கூறினார்.

மகாராஷ்ட்ரா, கேரளா, கோவா மற்றும் கர்நாடகாவின் கடலோர பகுதிகளில் அடுத்த ஐந்து முதல் ஆறு நாட்களுக்கு கனமழை நீடிக்கக்கூடும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஒரு சில பகுதிகளில் கோடை வெயிலின் தாக்கமும் அதிகரிக்கக்கூடும் என்றார்.

பஞ்சாப் ஹரியானா, ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் கோடை வெயிலின் தாக்கம் அடுத்த இரு தினங்களுக்கு அதிகரித்தே காணப்படும் என்றும் திரு நரேஷ் குமார் தெரிவித்தார்.

**<<<<<>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

**Irish** ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Akanksha Salunkhe** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 11-8, 11-6, 11-4 என்ற செட் கணக்கில், சிங்கப்பூரின் **Wai Yhann Au Yeong**–ஐ வென்றார்.

-----------------

தாய்லாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Sri Vaibhavi Anumula** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-16, 22-20 என்ற செட் கணக்கில், தாய்லாந்தின் **Priyalakshmi Plempongsarnt** –ஐ வென்றார்.

மற்றொரு மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில், **Sahasra Kandikatla** வெற்றிபெற்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறினார்.

--------------------

மலேசிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் ஸ்ரீகாந்த் ஆடவர் ஒற்றையர் பிரிவிலும், **Tanisha Crasto – Dhruv Kapila** இணை கலப்பு இரட்டையர் பிரிவிலும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

---------

நான்கு நாடுகளுக்கு இடையேயான ஜுனியர் மகளிர் ஹாக்கிப்போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி இன்று அர்ஜென்டினா புறப்பட்டு சென்றது.

இப்போட்டி வரும் 25-ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் 2-ஆம் தேதிவரை **Rosario** –ல் நடைபெறவுள்ளது.

அர்ஜென்டினா, உருகுவே மற்றும் சிலி நாடுகள் இதில் பங்கேற்கின்றன.

-----------------

23 வயதுக்கு உட்பட்டோருக்கான இந்திய கால்பந்து அணியின் பயிற்சியாளராக **Naushad Moosa** நியமிக்கப்பட்டுள்ளார்.

--------------

உலகக்கோப்பை ஜுனியர் துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியாவின் **Kanak** தங்கப்பதக்கம் வென்றார்.

ஜெர்மனியின் **Suhl** –ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 10 மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்று பதக்கப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது

--------------

**<<<<<END>>>>**